# தேயிலை சிறுதோட்ட உடைமையாளர் அபிவிருத்தி அதிகாரசபை - 2010

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதிஉயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் தேயிலை சிறுதோட்ட உடைமையாளர் அபிவிருத்தி அதிகாரசபை 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்தது என்றும் இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான தேயிலை சிறுதோட்ட உடைமையாளர் அபிவிருத்தி அதிகாரசபையின் நிலைவரம் மற்றும் நிதிசார் நிலைமை, அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விளைவுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பனவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்ஏஎஸ்)

தலைமை அலுவலகம் மற்றும் காலி, மாத்தறை இரத்தினபுரி மற்றும் நுவரெலியா பிரதேச அலுவலகங்களில் தற்போதும் பாவனையிலுள்ள ரூபா 17,432,625 கிரயத்திலான முற்றாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட வாகனங்கள் இ.க.நி.இல.18 இன் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 6,701,825 தொகையான நிலையான வைப்புக்கள், முதலீடுகளின் கீழ் காட்டப்படுவதற்குப் பதிலாக, நிதிக்கூற்றுக்களில் காசு மற்றும் காசிற்கு சமமானவைகளின் கீழ் தவறுதலாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான இறுதி இருப்புக்களின் பெறுமதி, களஞ்சியத்திலுள்ள சேதமடைந்த, காலாவதியான மற்றும் பாவிக்க முடியாத விடயங்களைக் கருத்திற்கொள்ளாது கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்தன.

### 1.2.3 இணக்கம் செய்யப்படாத மீதிகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட காசேட்டு மீதி மற்றும் காசு மீதிகளிற்கிடையில் ரூபா 186,000 மொத்தத் தொகையான வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

### 1.2.4 கிடைக்கவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

(அ) காலப் பகுப்பாய்வின்படி, கடன்பட்டோர், கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் கடன்கொடுத்தோர்களான முறையே ரூபா 88,741,419 ரூபா 24,778,173 மற்றும் ரூபா 52,706,575 ஆன தொகைகள் 5 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல்/ தீர்க்கப்படாமல் விடப்பட்டிருந்தன.

(ஆ) ஆரம்பமீதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 161,074 தொகையான கொடுபடவேண்டிய ஊழியர் சேமலாப நிதி, மீளாய்வாண்டு இறுதிவரையிலும் கூட தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| **(அ)** | **அரசாங்க நிதிப்பிரமாணங்கள்** | |
| (i) | நி.பி.104(2) மற்றும் நி.பி.110 | பிரமாணங்களின் படி நட்டங்கள் |

வருமானம் ரூபா 37.1 மில்லியனால் அதிகரித்திருந்தமை இந்த முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாகும்.

## 2.2 தொழிற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயலாற்றல் மீளாய்வு

#### (அ) தேயிலை உற்பத்தியில் தேயிலை சிறுதோட்ட உடைமையாளர்களின் பங்களிப்பு

அதிகாரசபையின் 2010 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையின் படி, மீளாய்வாண்டில் இலங்கையின் மொத்தத் தேயிலை உற்பத்தி 329 மில்லியன் கிலோகிராம்களாக இருந்ததுடன் அதில் தேயிலை சிறுதோட்ட உடைமையாளரின் பங்களிப்பு 251.5 மில்லியன் கிலோ கிராம்கள் அல்லது 76.4% ஆக இருந்தது. முன்னைய ஆண்டில் இலங்கையின் மொத்தத் தேயிலை உற்பத்தி 298.8 மில்லியன் கிலோகிராம்களாக இருந்ததுடன் அதில் தேயிலை சிறுதோட்ட உடைமையாளரின் பங்களிப்பு 220.7 மில்லியன் கிலோகிராம்கள் அல்லது 76.2% ஆக இருந்தது. அதன் பிரகாரம் தேயிலை சிறுதோட்ட உடைமையாளர் அபிவிருத்தி அதிகாரசபையின் பங்களிப்பு மீளாய்வாண்டில் 0.2% ஆல் அதிகரித்திருந்தது.

#### (ஆ) தேயிலை பெருந்தோட்ட அபிவிருத்திக் கிரயம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளிற்கான பெருந்தோட்ட அபிவிருத்திக் கிரயம் மற்றும் அபிவிருத்திக் கிரயத்தின் ஒரு ரூபாவிற்கான அமுலாக்கல் கிரயம் என்பன கீழே தரப்படுகின்றன.

| | 2010 | 2009 | 2008 | 2007 | 2006 |
|---|---|---|---|---|---|
| வழங்கப்பட்ட அபிவிருத்திக் கிரயம் ரூபா மில்லியன் | 189.2 | 185.7 | 208.3 | 183.8 | 198.1 |
| அமுலாக்கல் கிரயம் ரூபா மில்லியன் | 205.4 | 202.1 | 188.7 | 179.0 | 186.3 |
| அபிவிருத்திக் கிரயத்தின் ரூபா 1 இற்கான அமுலாக்கல் கிரயம் ரூபா | 1.08 | 1.08 | 0.91 | 0.97 | 0.94 |

மீளாய்வாண்டில் தேயிலைப் பெருந்தோட்டங்களிற்குச் செலுத்தப்பட்ட அபிவிருத்திக் கிரயம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது ரூபா 3.5 மில்லியனால் அதிகரித்திருந்தது.

**(இ) நீடிப்பு மற்றும் ஆலோசனைச் சேவைகள்**

உதவிப் பணங்களை வழங்கல், தேயிலைமர நாற்றுக்கள் வழங்கல், தனித்தனியான மற்றும் தொகுதியான விவசாயிகள் பயிற்சி மற்றும் நீடிப்புச் சேவைகள் என்றவாறான தேயிலை சிறுதோட்ட உடைமையாளர் அபிவிருத்திச் சங்கங்கள் தொடர்பான நிதிசார் மற்றும் பொருட்கள் வழங்கல்கள், மேற்படி ஆலோசனைச் சேவைகளின் கீழ் வழங்கப்பட்டன.

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அதிகாரசபையின் 2010 இற்கான ஆண்டறிக்கையின் படி நீடிப்புச் சேவைகளின் பதவியணியினர் 34,500 தனியாள் மற்றும் தொகுதி நீடிப்புச் சேவைகளை நடாத்தியிருந்ததுடன் அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 25.7% குறைவானதாக இருந்தது.

(ii) மீளாய்வாண்டில் நீடிப்பு மற்றும் ஆலோசனைச் சேவைகளில் 210,334 விவசாயிகள் பங்குபற்றியிருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது அது 37.8% ஆல் குறைவடைந்திருந்தது.

(iii) நீடிப்புச் சேவைகள் தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானங்களின்படி, விவசாயிகளிற்கான நீடிப்பு அலுவலரின் விகிதம் 1:1000 ஆக இருக்கவேண்டும். எனினும் 2010 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட ஆண்டறிக்கையின்படி, விவசாயிகளிற்கான நீடிப்பு அலுவலரின் விகிதம் 1:2643 ஆக இருந்தது. ஆகையால் தனித்தனி விவசாயிகளிற்கு குறைந்த கவனமே செலுத்தப்பட்டிருந்ததென தெரிகின்றது.

(iv) மாத்தறை, காலி மற்றும் கேகாலை பிராந்திய அலுவலகங்களுடன் இணைக்கப்பட்டிருந்த நீடிப்பு அலுவலர்கள் ரூபா 9,125,350

## 2.6 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

2008 ஆம் ஆண்டில் ரூபா 15,000 மாதாந்த குத்தகை வாடகைக்கான குத்தகை அடிப்படையில் தேயிலை சக்தி நிதியத்தின் தொழிற்சாலைக்கு ஒரு லொறி வாகனம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், தேயிலைச் சக்தி நிதியம் 2008 ஆம் ஆண்டிற்காக ரூபா 30,000 மொத்தத் தொகையான இரண்டுமாத குத்தகை வாடகையை மட்டுமே செலுத்தியிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதி வரைக்கும் வேறுஎதுவித வரவேண்டியவைகளும் அதிகார சபைக்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு மற்றும் உண்மையானவற்றுக்கிடையில் குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டது. ஆகையினால் அது பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக்காட்டுகின்றது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக்காலம் அதிகார சபையின் தலைவரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கிடைக்க வேண்டியவைகள் மற்றும் கொடுபட வேண்டியவைகள்
(ஆ) இருப்புக்கள்
(இ) காசு முகாமைத்துவம்
(ஈ) வங்கிக் கணக்கிணக்கம்
(உ) உதவிப்பண கொடுப்பனவுகள்.